ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1642/28 - 2010 පෙබරවාරි 26 වැනි සිකුරාදා - 2010.02.26

*1642/28 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக, சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

ஆதம்லெவ்வை தம்பிக்கண்டு முஹம்மது மொஹமட் தம்பி என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அஸ்வர் உதுமா லெவ்வை என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது சம்மாந்துறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அஸ்வர் உதுமா லெவ்வை என்பவர், சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
சம்மாந்துறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, பெப்புருவரி 18.

3- 490/1

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ் சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதன் காரணமாக, சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவரின் பதவி, வெற்றிடமாகியுள்ளதாதலாலும்;

நஸீர் மொஹமட் ஆசிக் என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர், முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுடையவருமான ஆளொருவரைப் பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே சொல்லப்பட்டதான அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ஆதம்பாவா கோஸ் மொகைதீன் என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது சம்மாந்துறை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் எம். எம். எஸ். கே. பண்டார மாபா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான ) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஆதம்பாவா கோஸ் மொகைதீன் என்பவர், சம்மாந்துறை பிரதேச சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். எஸ். கே. பண்டார மாபா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
சம்மாந்துறை பிரதேச சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
அம்பாறை,
2010, பெப்புருவரி 18.

3- 490/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.